**இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் - 2018**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் (''குழு'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக்கூற்று, நிதிகள் மற்றும் ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு பரப்பெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக குழுவின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு செயற்படுகின்றதா எனவும்,

- இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| தொடர்புடைய நியமத்துடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 12,293,912 கிரயமுடைய கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், உடற்பயிற்சி உபகரணம், அலுவலக உபகரணம் மற்றும் தளபாடமும் பொருத்துக்களும் அவை | 2018 இல் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த சொத்துக்கள் மற்றும் | சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் என்பன ஆகக் குறைந்தது ஒவ்வொரு |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், இதுவரை பயன்பாட்டில் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் பிரிவின் 19 ஆந் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்திருக்காமையின் விளைவொன்றாக, நியமத்தின் 10 ஆம் பிரிவின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீட்டுப் பிழையினை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உபகரணங்களினை மீள் பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 2 ஆம் பிரிவின் 52 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வாறு செய்வதற்கு அனுமதித்தாலொழிய நிதிக்கூற்றுக்களினை தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படக்கூடாது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது ரூபா 189,164 கூட்டுத்தொகையான 03 செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 803,856 கூட்டுத்தொகையான 25 வியாபார கடன்பட்டோர் மீதிகளுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 800,000 கூட்டுத்தொகையான 3 மானியங்களின் செலுத்த வேண்டிய மீதிகள் மானியச் செலவினங்களுக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 இல் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 2 ஆம் பிரிவின் 52 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வாறு செய்வதற்கு அனுமதித்தாலொழிய தவிர, நிதிக் கூற்றுக்களினை தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படக் கூடாது. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆயுட்காலம் தீர்ந்துவிட்ட போதிலும், அது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருக்க வில்லை. ஆகையினால், ரூபா 5,224,794 பெறுமதியுடைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வின் பிழையாக கணிப்பீடு காரணமாக 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 842,440 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | விடயத்தினைக் கண்டறிந்து நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிப்படுத்தலினை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 926,000 தொகையான வருடாந்த கூட்டமைப்பு உறுப்புரிமை மானியம், 2017 ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் சரிப்படுத்தப்பட்டிருப்பதற்குப் பதிலாக, 2018 ஆம் ஆண்டிற்கான வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப் பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டுடன் இணங்கஞ் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிப்படுத்தல்களினை மேற்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி என்பவற்றுக்கான பங்களிப்பு, கணிப்பீடுகளுக்கான ரூபா 1,022,645 தொகையான வாழ்க்கைச் செலவுப் படிகளினை கருத்திற் கொண்டிருக்காமை காரணமாக, முறையே ரூபா 122,717 மற்றும் ரூபா 30,679 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கான பங்களிப்பினை அளவிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிடமிருந்து ரூபா 6,878,916 தொகையொன்று பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அது மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய மீதியொன்றாக இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இது பல ஆண்டுகளாக மீதி கீழ்க்கொண்டு வரப்படுகின்றதுடன் எமக்கும் விளையாட்டுத் துறை அமைச்சு / விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற் கிடையிலான நிலுவை மீதிகளினை தெளிவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். ஆனால், பல தடவைகள் அவர்களுக்கு நாங்கள் எழுதியிருந்த போதிலும், திணைக்களத்திட மிருந்து அந்தப் பணத்தினை பெறுவதற்கு எங்களால் முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிப்படுத்தலினை மேற்கொள்வதற்கு உடனடி நடவக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகல் அல்லது பதிவுகள்**

---

| வகை | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. | தொடர்புடைய பதிவின் பிரகாரம் ரூபா. | வித்தியாசம் ரூபா. | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத் திடமிருந்து பெற வேண்டியவை | 640,906 | 10,639,306 | 9,998,400 | இது பல ஆண்டுகளாக மீதி கீழ்க்கொண்டு வரப்படுகின்றதுடன் எமக்கும் விளையாட்டுத் துறை அமைச்சு / விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற் கிடையிலான நிலுவை மீதிகளினை தெளிவாக்குவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். ஆனால், பல தடவைகள் அவர்களுக்கு நாங்கள் எழுதியிருந்த போதிலும், திணைக்களத்திட மிருந்து அந்தப் பணத்தினை பெறுவதற்கு எங்களால் முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மீதிகளினை இணக்கஞ் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 11,596,940 பற்றாக்குறையொன்றையுடைய தொகையாகக் காணப்பட்டதுடன் தொடர்புடைய முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 664,763 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவில் ரூபா 10,932,177 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 24,688,125 இனால் அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், ரூபா 35,195,121 இனால் மொத்தச் செலவினங்கள் அதிகரித்திருந்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் 33 தேசிய கூட்டமைப்புக்கள் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், 24 கூட்டமைப்பு உறுப்பினர்கள் ரூபா 5,641,000 கூட்டுத்தொகையான வருடாந்த மானியங்களினை மாத்திரம் வழங்கியிருந்ததுடன் 09 உறுப்பினர்கள் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு முறையான ஆவணங்களினை சமர்ப்பித்திருக்காமை காரணமாக 2017 ஆம் ஆண்டிற்கான மானியங்களினை வழங்கியிருக்கவில்லை. | தேசிய கூட்டமைப்பு சில தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது அவர்களின் வருடாந்த மானியத்திற்கு பிரயோகிக் வேண்டிக் காணப்பட்டமை முன்னைய குழுவினால் பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாக காணப்படுகின்றது. தேசிய கூட்டமைப்புக்கள் அதனுடன் இணங்காது அவர்களின் மானியத்திற்காக விண்ணப்பிக்குமாயின், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு மானியத்தினை வழங்காது. | தேசத்தின் விளையாட்டு செயற்பாடுகளினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட தேசிய கூட்டமைப்புக் களுக்கான மானியத்தை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் 33 தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களில், 22 உறுப்பினர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 4,400,000 கூட்டுத்தொகையான வருடாந்த மானியங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 05 | தேசிய கூட்டமைப்பு சில தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது அவர்களின் வருடாந்த மானியத்திற்கு பிரயோகிக்க வேண்டிக் காணப்பட்டமை முன்னைய குழுவினால் பின்பற்றப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையாகக் காணப்படுகின்றது. | தேசிய கூட்டமைப்புக் களுக்கான மானியங்களினை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

உறுப்பினர்களுக்கு ரூபா 926,000 தொகையான வருடாந்த மானியங்களினை வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு முறையான ஆவணங்களினை சமர்ப்பித்திருக்காமை காரணமாக, 11 உறுப்பினர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மானியத்தினை வழங்கியிருக்கவில்லை.

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆசிய ஒலிம்பிக் (ஓசீஏ) 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இருப்பு வகைகளின் கீழ் முறையே ரூபா 1,000,000 மற்றும் ரூபா 19,350 பெறுமதியுடைய கோப்பி மேசைப் புத்தகம் மற்றும் தொழில்நுட்ப பாடநெறி சான்றுப்பத்திரங்களினை காட்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த வகைகள் ஒரு வருடத்திற்கும் அதிகமாக விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றோம். 2019 இல் இருப்புச் சொத்துக்களில் காணப்படும் விளைவற்ற இருப்பின் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பின் வினைத் திறனான முகாமைத்துவத் துக்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒலிம்பிக் குழுவின் உத்தியோகத்தர்களுக்காக நிறைவேற்றுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முறையானதொரு ஆட்சேர்ப்பு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் ஆளணியினர் நிறைவேற்றுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் பாரிய இலாபத்தை உருவாக்கும் செயற்பாடுகளினைக் கொண்டிருக்கவில்லை. ஆகையினால், வெறுமனே அதி இழிந்ததாக மேந்தலைகளினை பேணுவதற்கு வெறுமனே அதிஇழிந்த ஊழியர்களுடன் முகாமை செய்கின்றோம். ஆகையினால், கையில் செயற்திட்டங்கள் காணப்படுகையில் / செயற்திட்டங்கள் வருகின்ற போது, நாங்கள் ஊழியர்கள் தேவை தொடர்பான மதிப்பீடொன்றினை மேற்கொள்கின்றதுடன் ஆட்சேர்ப்புக்களினை மேற்கொள்கின்றோம். | வினைத்திறனான மனித வள முகாமைத்துவத்திற்காக ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியணியினர் களுக்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகை வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது நிறைவேற்றுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவால் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை எல்லைகளின் அங்கீகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் பெறுகை வழிகாட்டல்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் 2019 இல் பெறுகை வழிகாட்டல்களினை தயாரித்து EXCO அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளோம். மேலும், நாங்கள் 2020 இற்கான பெறுகைத் திட்டத்தினைத் தயாரித்திருக்கின்றதுடன் 2019 இல் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டலிலுள்ள பெறுகை எல்லையினை வரையறுத்துள்ளோம். | பெறுகை வழிகாட்டலினை அங்கீகரிப்பதற்கு செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்து பெறுகை எல்லைகளினை தீர்மானிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| குழுவின் எதிர்கால வழிகாட்டல்களினைத் தீர்மானிக்கக்கூடிய தந்திரோபாயங்களினை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். ஆனால், கூட்டிணைந்த திட்டமொன்றினை கூட்டிணைக்கையில் இலக்குகளினை அமைக்கும் போது ஒப்பீடு செய்யக்கூடியதாக யாதார்த்தமான மற்றும் அடையக்கூடிய இலக்குகள் குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எமது தந்திரோபாய திட்டத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு தந்திரோபாய திட்டமிடல் அமர்வொன்றினை நடாத்துவதற்கு பாதீடு 2020 இல் ஏற்பாடுகளினை நாங்கள் வழங்கியுள்ளோம். | குழுவின் எதிர்கால வழிகாட்டல்களினை உள்ளடக்கியதாக கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அடையக்கூடிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை உள்ளடக்கியதாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் அடுத்துவரும் வருடத்திலிருந்து செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்போம். | செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |